ஓம் சரவணஜோதியே நமோ நம

சித்ரா பௌர்ணமி மற்றும் குருபூஜை விழாவிற்கு

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூல்**

12.04.2025

1. ஓங்்கார ஞான சொரூபமாகி
   ஓங்காரக்குடில்தனை படைத்து இனிதே
   ஓங்கார ஞானம் உலகோர் பயில
   ஓங்கார ஞானசபை நிறுவி அரங்கன் யானும்

2. உயர்வான சுத்த சன்மார்க்க மெய்நெறியாம்
   வகைபட உலகோரெல்லாம் பின்பற்றி
   வல்லமைபட வருங்காலங்களில்
   அவரவர்களும் ஞானியர்களாக

3. ஆற்றல் பெருக்கம் காணும் வண்ணம்
   வல்லமை கூட்டி அரங்கன் யான்
   இந்த கலியுகத்தில் ஏழாம் படை வீடு என்கின்ற
   பிரணவக் குடிலை நிறுவி இனிதே

4. அன்பர்கட்கு கொள்கையாகவும்
   தர்மமாகவும் தயவாகவும்
   தந்தையாகவும் குருவாகவும்
   சர்வபலம் கூட்டி அருளி வந்துள்ளேன்

5. உள்ளபடி இந்த உலகோர்க்கு
   எந்தனுடைய மகா சக்தி
   சூட்சும நிலை அறிந்த பின்னேதான்
   ஆறுமுகப்பெருமானும் அச்சமற எந்தனுக்கு

6. ஜோதியுள் ஐக்கியம் தந்து இனிதே
   இதுகாலம் சரவணஜோதியாக
   உலகோர்க்கு ஆங்காங்கே
   அன்பர்கள் எனை வேண்டி ஏற்றுகின்ற

7. ஜோதியில் யானே நின்று
   அருளுகின்ற வண்ணம்
   மகத்துவம் கொண்டு இனிதே
   இந்தவித காலம் என் மக்களாம்

8. தேசங்களெல்லாம் நிரம்பியுள்ள
   எல்லா தேசத்திலும் ஆங்கே

ஏற்றுகின்ற ஜோதியில் சரவண ஜோதியாக
ஆறுமுக அரங்கன் யான் காட்சியும்

9. ஆசியும் தந்து அருள்புரிகின்றேன்
அவ்வாறே இந்தவித காலம்
உத்தமமாய் வருகின்ற சித்ரா பௌர்ணமி
நன்னாளில் வகைபட உலகோர்க்கு

10. பிரணவக் குடிலின் அரங்கன் என்
முக்தி தடத்தில் உள்ள இனிதே
ஜோதியின் வழி அன்பர்கள்
சரணாகதிக்கு தக்கவாறு பரிபூரண

11. காட்சியும் ஆசியும் அரங்கன் யான்
வேலவனாகவும் ஜோதியாகவும்
வேலாகவும் அரங்கனாகவும்
காட்சி தந்து அருள்புரிய உள்ளேன்

12. உள்ளபடி அந்தவித நன்னாளில்
ஓங்காரக்குடிலில் பல அற்புதங்கள்
நடக்கக் கூடும் வகைபட இதனோடு
அரங்கன் என் உயர்வுபட

13. முதல் குரு பூஜை விழாவில்
உத்தமமாய் அரங்கன் என்
ஆசி பெற்று இயங்குகின்ற
அனைத்து கிளை சங்கங்களும்

14. சங்கத்தின் தொண்டர் பெருமக்களும்
வல்லமைபட வந்திணைந்து
ஓங்காரக்குடிலில் பெருவிழாவாக
அரங்கன் என் தடத்தில்

15. நிரம்பி இனிதே என் நாமஜெபம்
லட்சோப லட்சம் உரு ஏற்றி இனிதே
அவை நன்னாளில் அளவில்லா வண்ணம்
சித்திர அன்னம் கூட்டி தர்மங்கள் இட

16. வகைபட அவை நன்னாளில்
உலகமெங்கும் மகா சக்தியாய் இயங்கும்
அளவில்லா எண்ணிலா கோடி
ஞானியர் கூட்டங்கள் வந்திறங்கி

17. அப்பனே பல மகா விந்தைகளும்
அற்புதங்களும் மகா சக்திகளும்
வரமாக வந்து கலந்து கொள்வோர்க்கு
கிட்ட நேரும் மிகைபட

18. இவ்வித விழாவில் மேலாக
ஞானபண்டிதனே தலைமையேற்று பாதுகாப்பருள
இவ்விழாவில் வரும் அன்பர்கட்கும்
விழாவில் தர்மத்தின் வழி

19. பங்களிப்பு கொள்வோர்க்கும்
இதனொடு தொண்டாற்றுகின்ற
தொண்டர்கட்கும் வந்து கலந்து
பூஜையின் வழி நன்மை பெற

20. வேண்டி வருபவர்க்கு இனிதே
வரமாக அன்று எல்லா ஞானியர்களும்
பெரும் சக்தி தர இருக்க
அன்பர்கள் வந்து கலந்து இவ்விழாவில்

21. அற்புதம் காண வேண்டி
அரங்கன் யான் அழைக்கின்றேன்
இந்த விழாவிற்கு நிர்வாகத்திற்கு
போதுமான அளவுக்கு மேலான வண்ணம்

22. பொருளாதார பலமும் கூட்டி
கேட்கின்ற இடமெல்லாம்
தடையில்லா வண்ணம் பொருள் வளம்
வழங்கும் வண்ணம்

23. சக்தியும் பலமும் தந்து அரங்கன் யான்
அருள் புரிவேன் இதனொடு விழாவில்
சமையல் பணிகளிலும் மற்ற
அன்னதான சேவையாற்றக் கூடிய

24. தொண்டு பணிகளிலும் அன்பர்கள்
அரங்கன் என்பால் ஈடுபாடு கொண்டு
இனிதே செய்கின்ற அனைத்து காரியங்களிலும்
அரங்கன் யான் சர்வ பாதுகாப்பு கூட்டி

25. அருள் செய்வேன் தொண்டர்களுக்கும்
வரும் அன்பர்களுக்கும்

உலகம் முழுக்க வந்து
எந்தன் கடாட்சம் ஏற்று செல்பவர்களுக்கும்

26. பயண பாதுகாப்போடு
தங்கும் காலங்களிலும்
சர்வ பாதுகாப்பு கூட்டி
அருள் புரிவேன்

27. இவ்விழாவில் மகா சக்திகளெல்லாம்
வந்திணைந்து பேரற்புதங்கள்
நிகழ இருக்க ஓங்காரக்குடிலில்
தர்மத்தின் பலம் இந்த நன்னாளில்

28. மிகுதியாகும் அன்னதனால் என்
நிர்வாக உயர் மக்களெல்லாம்
இனிதே எந்த சோர்வும் கொள்ளாத வண்ணம்
அரங்கன் என் நாமஜெபத்தைக் கூறி

29. உயர்வுபட தொண்டாற்ற அவர்கட்கு மனபலமும்
தேகபலமும் சர்வபலமும் கூட்டி
அரங்கன் யான் துணையிருப்பேன்
அச்சமற இவ்விழாவாம் இந்த சிறந்த

30. நன்னாளில் குடிலின் பெருமைகளும்
அரங்கன் என்னுடைய பெருமையும்
அளவில்லா வண்ணம் அனைத்து தேசங்களுக்கும்
பரவும் வண்ணம் அற்புதங்கள் நிகழக் கூடும்

31. இந்தவித விழாவின் பின்னே
இனிதே ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தோடும்
தொண்டர் பெருமக்களின் பெருமையோடும்
உலகமெங்கும் இயங்குகின்ற கிளைச் சங்கங்களுக்கும்

32. எல்லா பாதுகாப்பும் கூடி
ஆங்காங்கே மற்ற தேசங்கள் வழி
மற்ற மதத்தவர் மாந்தர்கள் வழி
வருகின்ற குறுக்கீடுகளெல்லாம் கூட

33. மகா சக்திகளால் கட்டுக்குள் வரப்பட்டு
சுத்த சன்மார்க்க சைவநெறி ஏற்கும்
அன்பர்களுக்கு உலகமெங்கும் பாதுகாப்பும்
ஆன்மீக ஞானவழி தொடர்பு கூட்டி

34. தயவோடு வாழுகின்ற மக்கட்கு
எந்தவித பேரிடராலோ பிற வழியோ
இன்னல்கள் அணுகாத வண்ணம்
சர்வ பாதுகாப்பு கூடி

35. அவரவர்கள் ஆங்காங்கே
தர்மத்தை தடையற செய்து கொண்டு
தயவோடு இந்த மார்க்கம்
காலாகாலம் தழைத்தோங்கும் வண்ணம்

36. பேராற்றல்பட இயங்கிடவும்
அரங்கன் யான் பெரும் பலம் கூட்டி
அருள்புரிவேன் அச்சமற இவ்விழாவில்
அனைத்து வசதிகளும் அனைத்து வகையான

37. பொருளுதவிகளும் அனைத்து வகையான
அன்பர்களின் பேருதவியும் கிட்டி
விழா சிறக்க அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
பாதுகாப்போடு கூடிய அரங்கனின் ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி